RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023- 2025




# மாலை தந்தி
## MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-80 | 27 மார்ச் | வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## இயக்குநர் பாரதி ராஜா மகன் மறைவுக்கு முத்தரசன், இளையராஜா இரங்கல்

சென்னை, மார்ச்.27

பாரதிராஜா மகன் மனோஜ் பாரதி மறைவுக்கு இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "இயக்குநர் பாரதி ராஜா மகன் மனோஜ் பாரதி (48) நேற்று முன்தினம் (25.03.2025) மாரடைப்பால் காலமானார் என்ற செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம். கடந்த 1999 ஆம் ஆண்டு தாஜ்மகால் திரைப்படத்தின் மூலம் வெள்ளித்திரையில் அறிமுகமான மனோஜ் பாரதி தொடர்ந்து சமுத்திரம், கடல் பூக்கள், ஈரநிலம், அன்னக்கொடி, ஈஸ்வரன், மாநாடு, விருமன் ஆகிய படங்களில் நடித்துள்ளார்.



இயக்குநர் பணியிலும் முன்னேறி வந்த மனோஜ் திடீரென காலமான செய்தியை எளிதில் ஏற்றுக் கொள்ள இயலவில்லை. முதுமை காலத்தில் கலங்கி நிற்கும் பாரதிராஜா ஆற்றுப்படுத்திக் கொள்ள முடியாத துயரமாகும். அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பதினருக்கு ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது." எனத் தெரிவித்தார்.

### இளையராஜா

இசையமைப்பாளர் இளையராஜா உருக்கமாக வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

மனோஜ் பாரதிராஜா மறைவுக்கு இளையராஜா இரங்கல்! இளையராஜா வெளியிட்ட வீடியோவில், என்னுடைய நண்பர் பாரதியின் மகனான மனோஜ் குமார் மறைந்த செய்திகேட்டு மிகவும் அதிர்ந்துபோனேன். என்ன சொல்வதற்கும் எனக்கு வார்த்தை வரவில்லை. இப்படி ஒரு சோகம் பாரதிக்கு நடந்திருக்க வேண்டாம் என்று தோன்றினாலும், நிகழ்வதை நம்மால் தடுக்க இயலாது, ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். காலம் விதித்திருக்கின்ற காரணத்தால், மனோஜின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்." எனப் பேசியுள்ளார்.

## "அமித் ஷாவை சந்தித்தது கூட்டணிப் பேச்சுக்காக இல்லை; மக்கள் பிரச்சினைகளுக்காக - இபிஎஸ் விளக்கம்

புதுடெல்லி, மார்ச்.27

"டெல்லியில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை நேற்று சந்தித்த போது கூட்டணி பற்றி பேசவில்லை. மக்கள் பிரச்சினைகள் பற்றியே பேசினோம்." என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி விளக்கமளித்துள்ளார். டெல்லி விமான நிலையத்தில் இன்று (மார்ச் 26) காலையில் பேட்டியளித்த எடப்பாடி பழனிசாமி இவ்வாறு தெரிவித்தார்.



முன்னதாக நேற்று, அமித் ஷா தனது எக்ஸ் வலைதளத்தில், "2026ல் தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமையும்" என்று பதிவிட்டிருந்தார். இது தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. 2026 தேர்தலில் அதிமுக பாஜக கூட்டணி உறுதியாகிவிட்டதாகவே பேசப்பட்டது. ஆனால் அவற்றைப் புறந்தள்ளும் வகையில் எடப்பாடி பழனிசாமி பேட்டி அமைந்துள்ளது.

எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களிடம் கூறியதாவது: டெல்லியில் நேற்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்தோம். அதில் பிரதானமாக, தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தமிழகத்துக்கு மத்திய அரசு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினோம். எஸ்எஸ்ஏ திட்டத்தில் தமிழகத்துக்கு விடுவிக்க வேண்டிய கல்வி நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று கோரினோம்.

அதேபோல், தமிழகம் இருமொழிக் கொள்கையை கடைபிடித்து வருகிறது. அதை தொடர்ந்து கடைபிடிக்க தடை இருக்கக் கூடாது என்றும் நாடாளுமன்ற தொகுதி மறுவரையறையை தமிழகத்துக்கு எவ்வித பாதிப்புமின்றி நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினோம்.

தமிழ்நாடு நீர்ப் பற்றாக்குறை மாநிலமாக இருக்கிறது. தமிழக மக்களுக்கு தொடர்ந்து நீர் கிடைக்கும் விதமாக கோதாவரி காவிரி இணைப்புத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினோம்.

அதேபோல், 'நடந்தாய் வாழி காவிரி' திட்டத்துக்கான நிதியை விடுவித்து அத்திட்டம் முழுமை பெற நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினோம். மேகேதாட்டுவில் அணை கட்ட கர்நாடக அரசுக்கு மத்திய அரசு துணை நிற்கக் கூடாது என்று வலியுறுத்தினோம்.

முல்லைப் பெரியாறு அணையை பலப்படுத்த தேவையான நடவடிக்கையை மேற்கொள்ள கேரள அரசு தடையாக உள்ளது. உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி அணையை வலுப்படுத்த, நீர்த்தேக்க அளவை உயர்த்த கேரள அரசு உடன்பட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றோம். தமிழக ரயில்வே திட்டங்களை விரைந்து செயல்படுத்தக் கோரினோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக டாஸ்மாக் முறைகேடு பற்றி எடுத்துரைத்தோம். அதில் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளோம். தமிழகத்தில் சிறுமி முதல் மூதாட்டி வரை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகின்றனர், போதைப் பொருள் புழக்கம் அதிகரித்துள்ளது. இவற்றையெல்லாம் தடுக்க வேண்டும் என்று கூறினோம்." என்றார்.

தொடர்ந்து செய்தியாளர்கள் கேள்விக்குப் பதிலளித்த அவர், "எங்கள் சந்திப்பு 45 நிமிடங்கள் நடந்தது. அதில், முழுக்க முழுக்க மக்கள் பிரச்சினைகளை மட்டுமே பேசினோம். ஒவ்வொரு பிரச்சினையையும் விரிவாக எடுத்துரைத்தோம்.

கூட்டணி பற்றியெல்லாம் எதுவும் பேசவில்லை. தேர்தலுக்கு இன்னும் ஓராண்டு இருக்கிறது. கூட்டணி எல்லாம் தேர்தல் நெருக்கத்தில் பேசப்படும் விவகாரம். நாங்கள் இப்போது சென்று மக்கள் பிரச்சினைகளைப் பேச. நீங்களாகவே பத்திரிகை பரபரப்புக்காக கூட்டணி அமைந்தது என்றெல்லாம் சொல்கிறீர்கள். கூட்டணி என்பது வேறு. கொள்கை என்பது வேறு. எங்கள் கொள்கை எப்போதும் மாறாது. கூட்டணி என்பது சந்தர்ப்ப, சூழ்நிலைகள் பொருத்து அமையும்" என்று கூறிச் சென்றார்.

## 'எல்லாம் நன்மைக்கே' அமித்ஷா-பழனிசாமி சந்திப்பு குறித்து ஓபிஎஸ் கருத்து

சென்னை, மார்ச்.27

மத்திய அமைச்சர் அமித்ஷா, அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி ஆகியோரது சந்திப்பு குறித்து கருத்து தெரிவித்த முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், எல்லாம் நன்மைக்கே என்று தெரிவித்தார்.

டெல்லிக்கு திடீர் பயணம் மேற்கொண்ட அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, டெல்லியில் திறக்கப்பட்ட அதிமுகவின் புதிய அலுவலகத்தை நேற்று பார்வையிட்டார். தொடர்ந்து மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை நேற்று இரவு சந்தித்து பேசினார். இது அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியது.



இந்நிலையில், தமிழக சட்டப்பேரவையில் ஊரக வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றது. அமித்ஷா பழனிசாமி சந்திப்பு பேசும் பொருளாக மாறியுள்ள நிலையில், டெல்லியில் அமித்ஷாவுடனான பழனிச்சாமியின் சந்திப்பு குறித்து, சட்டப்பேரவைக்கு வருகை தந்த முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கருத்து தெரிவித்தார்.

அந்தவகையில், டெல்லியில் அமித்ஷா உடனான பழனிசாமியின் சந்திப்பு மற்றும் அதிமுக பாஜக கூட்டணி ஏற்படுமா? உள்ளிட்டவை தொடர்பான கேள்விகளுக்கு தலைமைச் செயலக வளாகத்தில் செய்தியாளர்களிடம் அவர் பதிலளிக்கையில், "எல்லாம் நன்மைக்கே" என்று மட்டுமே குறிப்பிட்டு சொல்லிவிட்டு, சட்டப்பேரவைக்குள் சென்றார்.

## சென்னையில் தொடர் செயின் பறிப்பில் ஈடுபட்ட நபர் என்கவுன்ட்டரில் சுட்டுக் கொலை! போலீசாரின் அதிரடி நடவடிக்கை

சென்னை, மார்ச்.27

சென்னையில் தொடர் செயின் பறிப்பில் ஈடுபட்ட நபர் போலீஸார் நடத்திய என்கவுன்ட்டரில் உயிரிழந்தார்.



சென்னையில் நேற்று (மார்ச் 25) ஒரே நாளில் ஏழு இடங்களில் நடைபெற்ற செயின் பறிப்பு சம்பவங்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஈஞ்சம்பாக்கம் பெத்தேல்நகர், அடையாறு சாஸ்திரி நகர், அடையாறு இந்திரா நகர், கிண்டி எம்ஆர்சி உள்ளிட்ட பகுதிகளில் இந்த சம்பவங்கள் நடைபெற்றன.

இப்படி காலை 6 முதல் 7.10 மணிக்குள் சுமார் ஒரு மணி நேரத்தில் அடுத்தடுத்து மூதாட்டிகளை குறிவைத்து நடைபெற்ற தொடர் செயின் பறிப்பு சம்பவங்கள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தின.

குற்றவாளிகளை பிடிக்க காவல் ஆணையர் அருண் உத்தரவின்பேரில், தென் சென்னை கூடுதல் காவல் ஆணையர் கண்ணன், இணை ஆணையர் சிபி சக்கரவர்த்தி மேற்பார்வையில் அடையாறு காவல் மாவட்ட துணை ஆணையர் பொன் கார்த்திக்குமார் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டது. தனிப்படை போலீஸார் செயின் பறிப்பு நடைபெற்ற பகுதிகளில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளின் அடிப்படையில் துப்புத் துலக்கினர்.

இதில், நகை பறிப்பில் ஈடுபட்ட கொள்ளையர்கள் 2 பேர் மட்டுமே எனத் தெரியவந்தது. மேலும், அவர்கள் சென்னை விமான நிலையம் நோக்கி சென்றதும் தெரிந்தது. எனவே, இதுகுறித்து விமான நிலைய அதிகாரிகளுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. மேலும், புறப்படத் தயாராக இருந்த ஐதராபாத் மற்றும் மும்பை விமானங்கள் தடுத்து நிறுத்தப்பட்டன. உடனடியாக போலீஸார் சம்பந்தப்பட்ட விமானங்களுக்குள் நுழைந்து ஆய்வு செய்தனர்.

அதில், 2 இளைஞர்களை சந்தேகத்தின் பேரில் பிடித்து விசாரித்தபோது, அவர்கள் உத்தரபிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்தது. அவர்களை ரகசிய இடத்தில் வைத்து போலீஸார் தொடர்ந்து தீவிர விசாரணை நடத்தினர். இதில், கொள்ளையர்களான இருவரும் திட்டமிட்டு இந்த நகை பறிப்பில் ஈடுபட்டிருப்பது தெரியவந்தது.

இந்த நிலையில், இந்த தொடர் செயின் பறிப்பு சம்பவங்களுக்கு மூளையாக செயல்பட்ட ஜாபர் குலாம் ஹுசைன் என்ற நபர் இன்று அதிகாலை போலீஸார் நடத்திய என்கவுன்ட்டரில் உயிரிழந்தார்.

விமான நிலையத்தில் நேற்று காலை கைது செய்யப்பட்ட இவர், விசாரணையில் தரமணி ரயில் நிலையம் அருகே நகைகளை பதுக்கி வைத்திருப்பதாக போலீஸாரிடம் தெரிவித்துள்ளார். பதுக்கி வைக்கப்பட்ட நகைகளை மீட்க போலீசார் ஜாபர் குலாம் ஹுசைனை அங்கு அழைத்துச் சென்றுள்ளனர்

அப்போது, அவர் போலீஸாரை தாக்கிவிட்டு தப்ப முயன்றதாக கூறப்படுகிறது. இதில் காவல் ஆய்வாளர் முகமது புகாரி நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஜாபர் குலாம் ஹுசைன் உயிரிழந்துள்ளதாக போலீஸார் தரப்பில் கூறப்படுகிறது. ஜாபர் மீது நாடு முழுவதும் 50க்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

## ரமலான் விடுமுறைக்கு சிறப்பு பேருந்துகள் அறிவிப்பு

சென்னை, மார்ச்.27

ரமலான் விடுமுறை காரணமாக, அரசு போக்குவரத்து கழகங்கள் சார்பில், சென்னை உட்பட பல்வேறு இடங்களில் இருந்து வரும் 28ம் தேதி முதல் 31 வரை போதிய அளவில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

அதன்படி, சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோவை, சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு வரும் 28ம் தேதி 460 சிறப்பு பேருந்துகளும், 29ம் தேதி 530 சிறப்பு பேருந்துகளும் என மொத்தம் 990 பேருந்துகள் இயக்கப்பட உள்ளன. இதேபோல, வரும் 31ம் தேதி சென்னைக்கும் இதர ஊர்களுக்கு 890 சிறப்பு பேருந்துகள்இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர். பெங்களூருக்கு வரும் 28ல் 100 சிறப்பு பேருந்துகளும், வரும் 29ல் 95 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்பட உள்ளன. மாதவரத்தில் இருந்து வரும் 28 மற்றும் 29ம் தேதிகளில் தலா 20 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும். 31ம் தேதி சொந்த ஊர்களில் இருந்து திரும்ப வசதியாக அனைத்து இடங்களில் இருந்தும் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது.

## தரமணி பாலிடெக்னிக் மாணவிக்கு பாலியல் வன்கொடுமை? போராட்டம் நடத்திய எஸ்.எஃப்.ஐ போலீஸார் இடையே மோதல்

சென்னை, மார்ச்.27

தரமணியில் பாலிடெக்னிக் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாகக் கூறப்படும் விவகாரத்தில், கல்லூரி நிர்வாகத்திடம் நீதி கேட்டு போராட்டம் நடத்திய மாணவர் அமைப்பினர் மற்றும் போலீஸாரிடையே கைகலப்பு ஏற்பட்டது.



சென்னை தரமணியில் சென்ட்ரல் பாலிடெக்னிக் கல்லூரி செயல்பட்டு வருகிறது. இதில், முதலாமாண்டு படித்துவந்த மாணவி, கடந்த வெள்ளிக்கிழமை தன்னுடன் படிக்கும் சக மாணவியுடன் தனது ஆண் நண்பரைச் சந்திப்பதற்காக வெளியே சென்றதாகக் கூறப்படுகிறது. நீண்ட நேரத்துக்கு பிறகு சக மாணவி மட்டும் கல்லூரி விடுதிக்கு திரும்பி உள்ளார்.

விடுதிக்கு திரும்பிய மாணவியிடம் நடத்தப்பட்ட விசாரணையில், அந்த மாணவி அவரது ஆண் நண்பரை சந்திக்க சென்றதாகவும், ஆனால் எங்கு சென்றார் என தெரியவில்லை என்றும் தெரிவித்துள்ளார். இதையடுத்து காணாமல் போன மாணவி, மறுநாள் சனிக்கிழமை காலை விடுதிக்கு திரும்பியுள்ளார். ரத்த காயங்களுடன் வந்த மாணவியிடம் விடுதி நிர்வாகத்தினர் விசாரணை நடத்தி உள்ளனர்.

அப்போது இன்ஸ்டாகிராம் மூலம் பழகிய ஆண் நண்பரைச் சந்திக்க சென்றதாகவும், அவர் போதை பொருளை தனக்குக் கொடுத்து, ஆண் நண்பருடன் சேர்ந்து சிலர் தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாகவும் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. இதுதொடர்பாக மாணவி புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்க கல்லூரி நிர்வாகம் மறுத்ததோடு, அந்த மாணவிக்கு 'டீசி' கொடுத்து அனுப்பியதாகக் கூறப்படுகிறது.

இதைத்தொடர்ந்து பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி கேட்டு இந்திய மாணவர் சங்கத்தினர் (எஸ்.எஃப்.ஐ), கல்லூரி முன்பு நேற்று கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது கல்லூரிக்குள் போராட்ட மாணவர்கள் திடீரென நுழைந்தனர். அவர்களை காவல்துறையினர் தடுக்க முயன்றதால் இருதரப்புக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர். இதனால் பதற்றமான சூழல் ஏற்பட்டது. இறுதியில் போராட்ட மாணவர்கள் அனைவரும் வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தப்பட்டனர்.


## சவுக்கு சங்கர் வேண்டுமென்றே என் மீது பழிபோடுகிறார்: செல்வப்பெருந்தகை குற்றச்சாட்டு

சென்னை, மார்ச்.27

சவுக்கு சங்கர் வீட்டில் கழிவுகளை வீசிய விவகாரத்தில், அவர் வேண்டுமென்றே தன் மீது குற்றம்சாட்டுவதாகவும், கழிவுகளை வீசியவர்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள் என்றால் நிரூபிக்கட்டும் என்றும் தமிழக காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தலைமைச் செயலக வளாகத்தில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கூறியதாவது: சவுக்கு சங்கர் வீட்டில் கழிவுகளை வீசிய சம்பவத்தை ஏற்கெனவே தமிழக காங்கிரஸ் சார்பில் கண்டித்து இருக்கிறேன். இவ்விவகாரத்தில் சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும். சட்டத்தில் இருந்து யாரும் தப்பிக்க முடியாது. ஆனால், இதில் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த பெண் ஒருவர் இருப்பதாக கூறுகின்றனர். அப்படி யாரும் கிடையாது. அப்படி இருந்தால் நிரூபிக்கப்பட்டும்.

அதேபோல, மாநகராட்சி ஒப்பந்தத்தை நான் எடுத்திருப்பதாகவும் கூறுகின்றனர். நான் எப்படி எடுக்க முடியும்? இந்த சம்பவத்துக்கும், எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அப்படி இருந்தால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரலாமே? சவுக்கு சங்கருக்கு என் மீது மறைமுகமான அஜென்டா இருக்கிறது. நான் மாநிலத் தலைவராக இல்லையென்றால், அவருக்கு வேண்டிய ஒருவரை மாநிலத் தலைவராக கொண்டு வருவதற்கு எல்லா முயற்சிகளையும் அவர் மேற்கொண்டு வருகிறார்.



இதுகுறித்து தமிழக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களுக்கும் தெரியும். டெல்லி தலைமைக்கும் தெரியும்.

குற்றங்களைக் கூறி என்னை தலைவர் பொறுப்பில் இருந்து எடுத்துவிட்டால், அவருக்கு வேண்டியவரை அப்பதிவியில் அமர்த்தி விடலாம் என அவர் திட்டமிடுகிறார். எனக்கு அவற்றை பற்றி எல்லாம் கவலையில்லை. அவரது செயல்திட்டம் வெற்றி பெறட்டும். என்னை திட்டி அவருக்கு பணம் கிடைக்கிறது என்றால் வாழ்த்துகள். அவர் நிறைய பணம் சம்பாதிக்கட்டும்.

தூய்மைப் பணியாளர்கள் கையால் மலத்தை அள்ளும் நிலையை மாற்றி, இந்தியாவிலே எங்கும் இல்லாத திட்டங்களை முதல்வர் ஸ்டாலின் கொண்டு வந்திருக்கிறார். அதில் தவறு இருந்தால் அதிகாரிகளிடம் முறையிடலாம். அதைவிடுத்து, தூய்மைப் பணியாளர்களைக் கொச்சைப்படுத்துவது, அவர்கள் குடித்துவிட்டு தூங்குகிறார்கள் என்று பேசுவதெல்லாம் ஏற்புடையதல்ல. இவ்வாறு அவர் கூறினார்.

# சிவகங்கை மாவட்டம் திருக்கோவில் பாதுகாப்பு பணியில் பணிபுரிய விருப்பமுள்ள முன்னாள் படைவீரர்கள் விண்ணப்பிக்கலாம்

சிவகங்கை, மார்ச்.27



சிவகங்கை மாவட்டம் திருக்கோவில் பாதுகாப்பு பணியில் பணிபுரிய விருப்பமுள்ள முன்னாள் படைவீரர்கள், உரிய ஆவணங்களுடன் முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தை நேரில் அணுகி பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தகவல் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்திலுள்ள திருகோவில்களுக்கான பாதுகாப்புப்பணிக்கு முன்னாள் இராணுவ வீரர்களுக்கு 77 பணியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், தற்போது 51 பணியிடங்கள் காலியாக உள்ளது.

எனவே, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அரசால் அனுமதிக்கப்பட்ட திருக்கோவில் பாதுகாப்பு பணியில் பணிபுரிய விருப்பமுள்ள, 62 வயதிற்குட்பட்ட முன்னாள் படைவீரர்கள் தங்களது படைவிலகல் சான்று மற்றும் அடையாள அட்டையுடன் முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தை நேரில் அணுகி பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சயர் ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

# சிவகங்கையில் ஏப்ரல் 1 முதல் கோடைகால நீச்சல் பயிற்சி முகாம்

சிவகங்கை மார்ச் 27



சிவகங்கை மாவட்டத்தின் சார்பாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சிவகங்கையில்

கோடைகால நீச்சல் பயிற்சி முகாம் வருகின்ற 01.04.2025 முதல் 08.06.2025 வரையிலான காலங்களில் சிவகங்கை மாவட்ட விளையாட்டரங்க பகுதியில் (நீச்சல் குளம்) நடைபெறவுள்ளது.

நீச்சல் கற்றுக்கொடுக்கும் திட்டத்தின் கீழ் நடைபெறும் 12 நாட்கள் பயிற்சி முகாம் 5 கட்டங்களாக நடைபெற வுள்ளது. மேலும், நீச்சல் கற்றுக்கொள்ளும் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற வரும் சிறுவர்கள் குறைந்தபட்ச 4 அடி (120 செ.மீ) உயரம் இருத்தல் வேண்டும். இப்பயிற்சி பெறுவதற்கு 12 நாட்களுக்கு ஒரு வேளை (1 மணி நேரம்) பயிற்சிக்கு ரூ.1,500/ + (18% GST) தொகை கட்டணம் ஆகும். இத்தொகையினை phone pay, gpay, debit card Íô‹ POS machine வழியாக செலுத்த இயலும்.

இப்பயிற்சி முகாமானது, வருகின்ற 01.04.2025 முதல் 13.04.2025 வரையும், 15.04.2025 முதல் 27.04.2025 வரையும், 29.04.2025 முதல் 11.05.2025 வரையும், 13.05.2025 முதல் 25.05.2025 வரையும், 27.05.2025 முதல் 08.06.2025 வரையும் என 5 கட்டங்களாக நடைபெறவுள்ளது. மேலும், தினசரி நீச்சல் கற்றுக்கொடுக்கும் பயிற்சி நேரமானது காலை வேளையில் 08.00 A.M. to 09.00 A.M., 09.00 A.M. to 10.00 A.M., 10.00 A.M. to 11.00 A.M ஆகும். மாலை வேளையில் 02.00 P.M. to 03.00 P.M., 03.00 P.M. to 04.00 P.M., 04.00 P.M to 05.00 P.M. ஆகும்.

மேலும், கோடைகால நீச்சல் பயிற்சி முகாம் தொடர்பான கூடுதல் விபரங்களுக்கு மாவட்ட விளையாட்டு அரங்கத்தினை 04575 299293 என்ற தொலைபேசி எண்ணிலோ, மாவட்ட விளையாட்டு அலுவலர் அவர்களை 74017 03503 என்ற அலைபேசி எண்ணிலோ, நீச்சல் பயிற்றுநர் அவர்களை 9786523704 என்ற அலைபேசி எண்ணிலோ அல்லது மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், திறந்தவெளி விளையாட்டு அரங்கம், மானாமதுரை ரோடு, R.D.M கல்லூரி அருகில், சிவகங்கை 630 561 என்ற முகவரியிலோ தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட 2வது மண்டலம் வார்டு எண்கள் 14, 21, உள்ள லட்சுமி நகர், ஏ.ஜி.எஸ் நகர், பாரத் நகர், ஆகிய பகுதிகளில் 2வது மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை புதிய மழைநீர் கால்வாய் மற்றும் சாலை பணிகளை தொடங்கி வைத்தார் உடன் மாமன்ற உறுப்பினர்கள் கலைச்செல்வி வெங்கடேசன், மங்கையர் திலகம் ராஜ்குமார், வட்ட கழக செயலாளர்கள் பி.வெங்கடேசன், பி.ராஜ்குமார், பிரான்சிஸ் பால் மற்றும் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் ஒப்பந்ததாரர்கள் குடியிருப்போர் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்..

# குரோம்பேட்டையில் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் சார்பில் இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி

குரோம்பேட்டை மார்ச் 27



குரோம்பேட்டையில் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் சார்பில் இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் திமுக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மமக மாநில துணை பொதுச்செயலாளர் தாம்பரம் எம்.யாகூப், பங்கேற்றனர்

சென்னை அடுத்த குரோம்பேட்டை சாஸ்திரி காலனி பகுதியில் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் சார்பில் இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி பல்லாவரம் தெற்கு பகுதி தலைவர் அப்துல் அஜீஸ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மமக மாநில துணைச் செயலாளரும், மாமன்ற உறுப்பினருமான தாம்பரம் யாக்கூப், தமுமுக மாநில செயலாளர் சிவகாசி முஸ்தபா, மதிமுக மாவட்ட செயலாளர் மாவை மகேந்திரன் கலந்து கொண்டு நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியின் போது சி.எல்.சி. சாலையில் ஆர்ச் மற்றும் புதியதாக கட்டபட்ட இரயில்வே சுரங்கபாலம், பேருந்து நிலையத்திற்கு மறைந்த காகிதமில்லத் பெயர் சூட்ட வேண்டும் என சட்டமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை வைத்தனர். இதனை அரசு அனுமதி பெற்றும், மண்டல் குழுத் தலைவர் ஒப்புதலுடன் நிறைவேற்றி தருவதாக தெரிவித்தார். இதில் மாவட்ட செயலாளர் எஸ்.கே.ஜாகிர் உசேன், பகுதி செயலாளர் பெர்னால்டு, மதிமுக நாசர் மாமன்ற உறுப்பினர்கள் புஸிராபானு நாசர், மகேஸ்வரி கார்த்திகேயன், விசிக மாவட்ட செயலாளர் தமிழரசன், இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் ஏராளமான இஸ்லாமிய சகோதர, சகோதிரிகள் மற்றும் திமுக, மதிமுக, விசிக, தமிழக வாழ்வுரிமை கட்சி உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்..

# பெரியகுளம் அருகே தாமரைக்குளம் பேரூராட்சியில் சாதாரண மாதாந்திர கூட்டம்

பெரியகுளம், மார்ச்.27



தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே தாமரைக்குளம் பேரூராட்சியில் சாதாரண மாதாந்திர கூட்டம் தாமரைக்குளம் பேரூராட்சி தலைவர் பால்பாண்டி தலைமையில் நடைபெற்றது. பேரூராட்சி செயல் அலுவலர் ஆளவந்தான் முன்னிலை வகித்தார். இந்த கூட்டத்தில் பொதுமக்களின் அடிப்படை வசதிகளான குடிநீர் வினியோகம், பொது சுகாதார பராமரிப்பு, தெரு மின்விளக்கு பராமரிப்பு, சிறு மின்விசை பம்பு அமைத்தல், சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல், ஐந்து ஆண்டுகளுக்கு மேல் அரசு பொறம்போக்கு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்பு குடியிருப்பு விவரங்கள், பிறப்பு, இறப்பு விகிதங்களை கணக்கீடுதல் மற்றும் 202425 நிதி ஆண்டில் வரவு செலவினங்களை பற்றி விவாதித்தனர். இந்த பேரூராட்சி மன்ற கூட்டத்திற்கு வார்டு கவுன்சிலர்கள் பாலாமணி பழனிமுருகன் (பணி நியமனக்குழு தலைவர்), மைதிலி அன்பழகன், வசந்தா மூக்கையா, ஜாகிர் உசேன், முனியம்மாள்,

தேவகி தென்னரசு, டென்சன், இளநிலை உதவியாளர் பாத்திமா மற்றும் அலுவலக பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஆட்சி மாற்றம் வந்த போதும் காட்சி மாறவில்லை

# திருத்தேர்வளை கீழக்கோட்டை, நாடார் கோட்டை, இந்திராநகர் கிராம பகுதி மக்கள் வேதனை.

ஆர்.எஸ்.மங்கலம் மார்ச்27



இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் தாலுகா ஆனந்தூர் அருகே உள்ள திருத்தேர்வளை ஊராட்சி திருத்தேர்வளை கீழக்கோட்டை, இந்திரா நகர், நாடார் கோட்டை பகுதிகளில் சுதந்திரம் அடைந்து 78 ஆண்டுகள் நிறைவடைந்ததும் இந்த பகுதிகளுக்கு செல்லக்கூடிய சாலை தார்ச்சாலையாக அமைக்கப்படாமல் உள்ளது தொடர் கதையாக உள்ளன இது குறித்து அப்பகுதி மக்கள் அதிகாரிகள் முதல் மக்கள் பிரதிநிதிகள் வரை பலமுறை கோரிக்கை வைதும் இந்த நாள் வரை தார்ச் சாலை அமைக்கப்படவில்லை ஆட்சி மாற்றமும் அதிகாரிகளின் மாற்றமும் தான் மாறுகிறதே தவிர சாலையின் நிலை மாறவில்லை என அப்பகுதி மக்கள் வேதனை

இது குறித்து அப்பகுதி மக்கள் கூறியதாவது ,,

நாடு சுதந்திரம் அடைந்து இத்தனை ஆண்டுகளாகியும் எங்களது பகுதிக்கு தார்ச்சாலை அமைத்துதரவில்லை இதனை அறிந்து கொண்டு தேர்தல் நேரங்களில் எங்களது பகுதிக்கு வாக்கு சேகரிக்க வரும் வேட்பாளர்களும் தார்ச் சாலை அமைத்து தருகின்றோம் என உறுதி அளித்து எங்களின் வாக்குகளை பெற்று வெற்றி பெற்ற பிறகு எங்களது பகுதியை திரும்பிகூட பார்க்காமல் பல ஆண்டுகளாக வாயிலேயே வடை சுட்டு கொண்டு இருக்கின்றனர் எங்களின் பகுதியில் உள்ள விவசாயிகள் பள்ளி கல்லூரி மாணவர்கள் முதியோர்கள் படும் சிரமம் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகிறது இதனை அரசு மற்றும் அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு செல்லும் வகையில் அவ்வப்போது நாளிதழ்களில் செய்தி வெளிவந்தால் செய்தி வந்த ஓரிரு நாட்களில் சாலையை வந்து அளவீடு செய்து விட்டு அப்படியே கிடப்பில் போட்டு விடுவது வழக்கம் இதனால் மாழை காலங்களில் லேசான மழை பெய்தாலே சாலை சேரும் சகதியுமாய் காட்சி தருவதால் விவசாய நிலங்களுக்கு விதை உரம், இயந்திரங்கள் கொண்டு செல்ல முடியாமலும் பள்ளி கல்லூரி மாணவ மாணவியர் பள்ளி கல்லூரி செல்ல இயலாமலும் முதியவர்களுக்கு மருத்துவம் பார்க்க செல்ல முடியாமலும் கர்ப்பிணி பெண்களை பிரசவத்துக்கு அழைத்து செல்ல முடியாமலும் மிகுந்த வேதனை அடைந்து வருகின்றோம் எனவே துறை சார்ந்த அமைச்சர் மற்றும் மாவட்ட நிர்வாகம் போர்க்கால அடிப்படையில் பருவமழை துவங்கும் முன்பே விவசாயிகள் மற்றும் பள்ளி கல்லூரி மாணவர்கள் பயனடையும் வகையில் தார்ச்சாலை அமைத்து தர வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

காத்து இருந்து பார்ப்போம் சுதந்திரம் அடைந்த நாள்முதல் தார்ச்சாலை இல்லாமல் தவிக்கும் கிராம மக்களின் கோரிக்கையை ஏற்று துறை சார்ந்த அமைச்சர் மற்றும் மாவட்ட நிர்வாகம் நடப்பாண்டு பருவமழைக்கு முன்பாக போர்க்கால அடிப்படையில் தார்ச்சாலை அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா???

# மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் சுய உதவி குழுக்கள் ஏ. எல். எப் இணைந்து நடத்தும் 5 ஆம் ஆண்டு விழா



பள்ளிக்கரணை மார்ச்27

சென்னை புறநகர் மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பள்ளிக்கரணையில் 23.03.25.ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு, ஸ்ரீ நீலாம்பாள் மஹால், பள்ளிக்கரணை, சென்னை 100. மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் ஏ.எல்.எப் இணைந்து நடத்தும் 5 ஆம் ஆண்டு விழா எஸ். நான்சி செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது. எஸ். லதா முன்னிலையில் சிறப்பு விருந்தினர்களாக 190 வது மாமன்ற உறுப்பினர், சிவப்பிரகாசம் மற்றும் 191 வது மாமன்ற உறுப்பினர், சென்னை புறநகர் மாவட்ட இணைச் செயலாளருமான ஜே.எல்.லட்சுமி மற்றும் ஸ்ரீ நீலாம் மஹால், சி.ஆர்.சேரிட்டிபில் டிரஸ்ட், சி.ஆர். சூரியபிரபா இணைந்து நடத்திய நிகழ்ச்சியில் கண்காட்சி மற்றும் கைவினைப் பொருட்கள், விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சி, பேச்சுப்போட்டி மற்றும் அறிவுத்திறன் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சி ஏ. எல். எப், ஒருங்கிணைப்பாளர்கள் செயலாளர், ஜே. கல்யாணி, தலைவர், எஸ். மரியா சுவாதி, தலைவர், ஜி. சங்கீதா, மற்றும் எஸ். யுவராணி, எஸ். தாட்ஷாயணி, பி. கோமதி உள்ளிட்ட மகளிர் அனைவரும் 5 ஆம் ஆண்டு விழாவை சிறப்பாக கொண்டாடினர்.



தேனி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் திருநங்கைகளுக்கான குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தலைமையில் நடைபெற்றது.




சேலம் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை நேரடியாக மொத்த கொள்முதல் செய்பவர்களிடம் விற்பனை செய்யும் வகையில் வாங்குவோர் விற்பனையாளர் சந்திப்புக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தலைமையில் (26.03.2025) நடைபெற்றது. உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) நே.பொன்மணி, வேளாண்மைத்துறை இணை இயக்குநர் சிங்காரம், தோட்டக்கலை துறை துணை இயக்குநர் மஞ்சுளா, மாவட்ட வணிக சங்க தலைவர் பெரியசாமி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஊராட்சி ஒன்றியம், நல்லுக்குறிச்சி கிராமத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு சார்பில், ஆடு வளர்ப்பு தொகுப்பு 2024-2025 கீழ், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உள்ள மகளிர் சுய உதவிக்குழுக்களை சேர்ந்த தீவனம் உற்பத்தி செய்வதற்கான நிலமுள்ள 20 பெண்களுக்கு தலா 10 ஆடுகள் வீதம் என மொத்தம் ரூ.14 இலட்சம் மதிப்பில் 200 ஆடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், வழங்கினார்.



விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஊராட்சி ஒன்றியம், நாலூர் ஊராட்சியில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் "கிராம இயற்கை சந்தை"யினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், துவக்கி வைத்தார்.



தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் உள்ள மகாகவி பாரதியார் பிறந்த இல்லம் பொதுப்பணித்துறையினரின் மூலம் மறு சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது



தூத்துக்குடி மாவட்டம் மீளவிட்டான் கிராமம் லோக்கியாநகரில் 39 பயனாளிகளுக்கு இலவச பட்டா வழங்குதல் தொடர்பான இடத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத் நேரில் பார்வையிட்டு ஆய்வுசெய்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இரவிச்சந்திரன் , சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு உடன்குடி) சிவசுப்பிரமணியன் , தூத்துக்குடி வருவாய் கோட்டாட்சியர் ம.பிரபு , தூத்துக்குடி வட்டாட்சியர் முரளிதரன் ஆகியோர் உள்ளனர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், வருவாய்த்துறை அலுவலர்களுக்கான மாதாந்திர பணி ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இரவிச்சந்திரன் , சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்கள் சிவசுப்பிரமணியன் (நில எடுப்பு உடன்குடி), திரு சங்கரலிங்கம் (சிப்காட்), .லொரைட்டா (நெடுஞ் சாலை), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சேதுராமலிங்கம் , தூத்துக்குடி வருவாய் கோட்டாட்சியர் ம.பிரபு மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# காட்பாடி பிரம்மபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஒரு மாதத்திற்கு மேலாக குடிநீர் பஞ்சம்

## குடிநீருக்காக அலைமோதும் பள்ளிக் குழந்தைகள்

வேலூர் மார்ச் 27

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பிரம்மபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் சுமார் 400க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். இந்தப்பள்ளியில் சுத்தமான குடிநீர் ஆர்.ஓ. இயந்திரம் அமைக்கப்பட்டு மாணவர்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வந்தனர்.

இந்நிலையில் சுமார் ஒரு மாதத்திற்கு மேலாக இந்த ஆர்.ஓ. இயந்திரம் பழுதடைந்துகுடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டு, மாணவர்களுக்கு பள்ளி நிர்வாகம் சார்பில் சுத்தமான போதிய குடிநீர் வழங்காமல் இதைப் பற்றி பொருட்படுத்தாமல் அலட்சியமாக செயல்பட்டு




வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் அரசு பள்ளி குழந்தைகளுக்கு மிகுந்த குடிநீர் பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

பள்ளி குழந்தைகள் குடிநீருக்காக இங்கும் அங்கும் வெளியில் செல்லும் அவல நிலையும் அதிகரத்து வருகிறது. இப்பள்ளியின் அருகில் உள்ள சமூக ஆர்வலர்கள் பள்ளி மாணவ மாணவிகளுக்கு தினமும் 20 லிட்டர் கொண்ட மினரல் வாட்டர் பாட்டில்கள் மூன்று அல்லது நான்கு குடிநீர் பாட்டில்கள் ஏற்பாடுகள் செய்து போதிய அளவு குடிநீரை மாணவர்களுக்கு திருப்திப்படுத்தும் வகையில் குடிநீர் வழங்கி வருகின்றனர். இப்போது மக்கள் பாராட்டிய வருகின்றனர். கோடை காலத்தில் குடிநீர் தட்டுப்பாடு பள்ளி மாணவர்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில், கோடை காலத்தில் குடிநீருக்காக ஒதுக்கப்படும் அரசு நிதியை பயன்படுத்தி உடனடியாக போதிய அளவு பள்ளி குழந்தைகளுக்கு குடிநீர் வழங்க உரிய ஏற்பாடுகள் சம்பந்தப்பட்ட துறை மற்றும் மாவட்ட ஆட்சியர் அதிவிரைவில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்து வருகின்றனர்.

# நாகர்கோவில் அல்போன்சா பள்ளி மாணவர்களின் விழிப்புணர்வுப் பேரணி

நாகர்கோவில் மார்ச் 27

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அல்போன்சா மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளியில் செயல்பட்டு வரும் சாரணர் சாரணியர் இயக்க இளையோர் மற்றும் மழலையர் பிரிவு, செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் தேசிய பசுமைப்படை ஆகிய அமைப்பைச் சார்ந்த மாணவர்கள் சுமார் 600 பேர் இணைந்து, குழந்தைகள் பாலியல் குற்றத்தடுப்புச் சட்டம் போக்சோ மற்றும் போதை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியினை நடத்தினர்.


இப்பேரணியானது காலை 10 மணிக்குக் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொடங்கி மத்தியாஸ் நகர் சந்திப்பு வரை நடைபெற்றது. இவ்விழிப்புணர்வுப்பேரணியை மாவட்ட குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலர் திருமதி சகிலா பானு மற்றும் துணை மாவட்ட ஆட்சியர் ஈஸ்வரநாதன் ஆகியோர் இணைந்து கொடி அசைத்துத் தொடங்கி வைத்தனர். மேலும் அல்போன்சா மெட்ரிக்குலேசன்





மேல்நிலைப் பள்ளியின் தாளாளர் பேரருட்தந்தை சனில் ஜான் பள்ளி முதல்வர் அருட்சகோதரிலிசபெத் துணை முதல்வர் பிரேம்கலா மேலும் பல்வேறு துறை சார்ந்த அரசு அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் தன்னார்வ தொண்டர்கள் எனப் பலர் மாணவர்களோடு இணைந்து விழிப்புணர்வுப் பேரணியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மாணவர்கள் குழந்தைகள் நல பாதுகாப்பு மற்றும் போதை ஒழிப்பு குறித்த பதாகைகளைக் கையில் ஏந்தியபடியும் முழக்கச் சொற்றொடர்களை முழங்கியும் பேரணியில் கலந்து கொண்டது பொதுமக்கள் மத்தியில் பெரும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அமைந்திருந்தது. அல்போன்சா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் ஒருங்கிணைத்தனர். இயக்கங்களின் பொறுப்பாசரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்..




தேனி அருகே உள்ள பழனிசெட்டிபட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட மேனகா மில் மைதானத்தில் நடைபெற்று வரும் 3வது புத்தகத்திருவிழாவில் மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத்சிங் சிறைவாசிகளுக்கான புத்தகத் தானப் பெட்டியில் புத்தகங்களை தானமாக வழங்கினார்.உடன் உதவி காவல் கண்காணிப்பாளர் கேல்கர் சுப்பிரமணிய பாலசந்ரா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மகளிர் திட்டத்தின் கீழ் நடைபெற்றுவரும் திடடங்கள் குறித்து ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் நடைபெற்றது.உடன் திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) சாம்சாந்தகுமார் மற்றும் உதவி திட்ட அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.




சின்னமனூர் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் மார்ச் 24 அன்று உசிலம்பட்டி கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் 4ம் ஆண்டு மாணவிகள் சார்பில் கிராமப்புற விவசாய அனுபவத் திட்டத்தின் கீழ் சின்னமனூர் காலனி நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் உலக நீர் தினத்தையொட்டி நீரின் அவசியம் பற்றிய விழிப்புணர்வு பேரணி நடந்தது. இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை அபிநயா, கரிஷ்மா, காவியா.இ, காவியா. நிஷிதா, சத்தியபிரியா, செல்வப்பிரியா, ஸ்ரீ கார்த்திகா, தமிழினி உள்ளிட்டோர் நடத்தி முடித்தனர்.

## தேனியில் முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து மருத்துவப் பராமரிப்பு நிதியுதவி மருத்துவ விழிப்புணர்வு முகாம்

தேனி, மார்ச்.27


தேனி மாவட்டத்தில் முன்னாள் படைவீரர்கள் மற்றும் சார்ந்தோர்களிடையே இணை இயக்குநர், சுகாதாரம் அவர்களால், பெரிகுளம் அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனை புறநோயாளிகள் பிரிவில் (Out Patient Block) 09.04.2025 மற்றும் 16.04.2025 ஆகிய இரு தினங்களில் காலை 08.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை மருத்துவ விழிப்புணர்வுமுகாம் நடைபெற உள்ளது.

இம்முகாமில் புற்றுநோய், பக்கவாதநோய், தொழுநோய், காசநோய், காண்பார்வைக் குறைபாட்டுநோய் மற்றும் குள்ளத்தன்மைநோய் உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட தேனி மாவட்ட முன்னாள் படைவீரர்கள் மற்றும் சார்ந்தோர்கள் தங்களிடமுள்ள மருத்துவச் சான்று, அடையாள அட்டை, படைவிலகல் சான்று மற்றும் ஆதார் அட்டை ஆகியவற்றுடன் நேரில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங், தெரிவித்துள்ளார்கள்.

## கன்னியாகுமரி மாவட்டம் பொதுமக்களின் புகார் மனுக்கள் மீதான மக்கள் கருத்து மையம் திறப்பு

கன்னியாகுமரி

கன்னியாகுமரி மாவட்டம் பொதுமக்களின் புகார் மனுக்கள் மீதான போலீஸ் விசாரணையின் திருப்தி மற்றும் பொதுமக்களின் பொதுவான தகவல்களை பகிர்ந்து கொள்ள மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் PUBLIC FEEDBACK CENTER செயல்பாட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் ஸ்டாலின் துவக்கி வைத்தார்




இந்த பப்ளிக் ஃபீட்பேக் சென்டர் ஆனது 24 மணி நேரமும் செயல்படும் மாவட்ட பொதுமக்களின் காவல்துறை தொடர்பு மற்றும் பொது மக்களின் குறைகளை கலைவதற்கும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் எடுக்கும் முன்னெடுப்புகளுக்கு முழு ஒத்துழைப்பு அளித்து இந்த வசதிகளை பயன்படுத்திக் கொள்ள மாவட்ட காவல்துறை சார்பாக கேட்டுக் கொள்ளப்படுகிறது என தெரிவித்தார்.




மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து சுற்றுலாத்துறை மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இணைந்து நடத்தும் ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் குழந்தைகளுக்கு ஒரு நாள் கல்வி சுற்றுலாவை மாவட்ட ஆட்சித்தலைவர் .மா. சௌ.சங்கீதா கொடியசைத்து துவக்கி வைத்தார்.

## குமுளி முதல் திண்டுக்கல் வரை ரயில் பாதை திட்டத்தை நிறைவேற்ற கோரி நடை பயணம்




வத்தலகுண்டு மார்ச்.27

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டுவில் குமுளி முதல் திண்டுக்கல் வரை ரயில் பாதை அமைத்து ரயில் விடக்கோரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நடைபயணமாக சென்று கோரிக்கை மனு கொடுக்க போராட்டக் குழு சென்றனர் செல்லும் வழியில் வத்தலகுண்டுவில் வத்தலகுண்டு வர்த்தக சங்கம் வரவேற்பு கொடுத்து பொதுமக்களும் வர்த்த சங்கரும் ஆதரவு தெரிவித்தனர் பின்னர் செய்தியாளர்களை சந்திக்கும் பொழுது போராட்டக் குழு தலைவர் சங்கரநாராயணன் கூறும் பொழுது திண்டுக்கல் லோயர் கேம்ப் ரயில் பாதை திட்டத்தை திண்டுக்கல் சபரிமலை ரயில் பாதை திட்டம் என மத்திய அரசு விரிவாக்கம் செய்தது ஆனால் லோயர் கேம்பிள் இருந்து சபரிமலை செல்லும் வழியில் பெரியார் அணை வனவிலங்கு சரணாலயம் மலைப்பாதை உள்ளதால் அதனை செயல்படுத்துவது மிகவும் கடினம் மேலும் காலதாமதமும் ஏற்படும் எனவேஇத் திட்டத்தை இரண்டு கட்டமாக அதாவது திண்டுக்கல் முதல் லோயர் கேம்ப் வரை முதல் திட்டமாகவும் லோயர் கேம்ப் முதல் சபரிமலை வரை இரண்டாவதாகவும் விரைவில் நிறைவேற்றலாம் இதில் முதல் கட்டமாக திண்டுக்கல் முதல் லோயர் கேம்ப் வரை 120 கிலோமீட்டர் திட்டத்தை உடனே துவங்க வேண்டும் இத்திட்டத்தால் தேனி திண்டுக்கல் இடுக்கி என மூன்று மாவட்ட பொதுமக்கள் வியாபாரிகள் பயன்பெறுவர் எனவே முதல் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற கோரி ஒன்றிய அரசுக்கும் ரயில்வே துறைக்கும் பரிந்துரைக்க கோரி ரயில் பாதை போராட்ட குழு 75 கிலோமீட்டர் நடைப்பயணமாக சென்று திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுக்க உள்ளோம் என கூறினர். உடன் போராட்டக் குழு 75 பேருக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு நடைபயணத்தை மேற்கொண்டனர்

## நெல்லை மாநகராட்சி பட்ஜெட் கூட்டம் நெல்லை மாநகரில் 40 இடங்களில் ரூபாய் 8 கோடியில் நவீன பேருந்து நிறுத்தம்

### 100% தேர்ச்சி பெறும் மாநகராட்சி பள்ளிகளுக்கு 3 லட்சம் ஊக்கத்தொகை




நெல்லை மார்ச் 27

நெல்லை மாநகராட்சி கூட்டம் மாநகராட்சி மைய அலுவலகத்தில் உள்ள ராஜாஜி மண்டபத்தில் நேற்று நடைபெற்றது மேயர் ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார் மாநகராட்சி ஆணையாளர் சுகபுத்திரா துணை மேயர் கே ஆர் ராஜூ ஆகியோர் முன்னிலை வகித்தனர் கூட்டத்தில் 2025 26 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை மேயர் ராமகிருஷ்ணன் தாக்கல் செய்தார் அதன்படி நெல்லை மாநகராட்சிக்கு ரூபாய் 403.70 கோடி வருவாய் கிடைத்துள்ளது அதே நேரத்தில் 400.94 கோடி செலவாகி உள்ளது பட்ஜெட்டில் பல்வேறு சிறப்பு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன நெல்லை மாநகராட்சி பகுதியில் உள்ள தாமிரபரணி ஆறு மாசுபடுவதை தடுக்கும் வகையில் அரசு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூபாய் 55.72 கோடி மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு செயல்படுத்தப்படும் மாநகராட்சியின் மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டு விதியாக 10 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது தேவைப்பட்டால் இந்த வார்டு மேம்பாட்டு நிதி ரூபாய் 25 இலட்சமாக உயர்த்தப்படும் என கூட்டத்தில் மேயர் அறிவித்தார்

மாநகராட்சி கட்டிடங்களில் ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள சோலார் பேனல்கள் சீரமைக்கப்படும் மேலும் புதிதாக 4 மெகாவாட் சோலார் அமைப்புகளை ரூபாய் 15 கோடியில் உருவாக்க சிறப்பு திட்டம் செயல்படுத்தப்படும் மாநகராட்சி பூங்காக்களில் ரூபாய் 50 லட்சத்தில் உடற்பயிற்சிகூடங்கள் அமைக்கப்படும் மாநகரில் 40 இடங்களில் ரூபாய் 8 கோடி செலவில் பேருந்துகள் நிறுத்துங்கள் நவீன வசதிகளுடன் அமைக்கப்படும் மாநகராட்சி பள்ளிகளில் மாணவர்களின் கற்றல் திறனை காலத்திற்கு ஏற்றவாறு நவீன தொழில்நுட்பத்துடன் பயிற்றுவிக்க தேவையான ஸ்மார்ட் வகுப்பறைகள் ரூபாய் 2.4 கோடியில் செயல்படுத்தப்படும் மாநகராட்சி பயன்பாட்டில் உள்ள பூங்காக்களை பொதுமக்கள் தினசரி பயன்படுத்தும் நோக்கில் துபாய் 2 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும் மாநகராட்சிக்கு உட்பட்ட நான்கு மண்டலங்களிலும் ரூபாய் 1.5 கோடியில் கால்நடைகளுக்கான எரிவாயு தகனமேடை அமைக்கப்படும் மாநகர பகுதிகளில் சுற்றி தெரியும் கால்நடைகளை பிடித்து கோசாலையில் விடுவதற்காக ரூபாய் 60 லட்சம் செலவில் வாகனங்கள் கொள்முதல் செய்யப்படும் நூறு சதவீதம் தேர்ச்சி பெறும் மாநகராட்சி பள்ளிகளுக்கு ரூபாய் 3 லட்சம் ஊக்கத் தொகையாக வழங்கப்படும் மாநகராட்சி பகுதிகளில் பொதுமக்களுக்கு தொல்லை தரும் விதமாக சுற்றி தெரியும் தெரு நாய்களைப் பிடித்து கருத்தடை செய்யும் பணிக்காக நவீன வசதிகளுடன் கூடிய கருத்துரை சிகிச்சை மையம் ரூபாய் 4 கோடியில் செயல்படுத்தப்படும் மாநகர பகுதிகளில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான காலி மனைகளை பறக்கும் காமராஜர் மூலம் சர்வே செய்து அதன் எல்லையை நிர்ணயித்து கம்ப்யூட்டில் பதிவேற்றம் செய்ய ரூபாய் 25 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மாநகராட்சி பள்ளிகளில் மாணவர்களின் விளையாட்டு திறனை மேம்படுத்தும் விதமாக சதுரங்கம் பேட்மிட்டன் ஸ்கேட்டிங் போன்ற விளையாட்டு பயிற்சி வகுப்புகள் ரூபாய் 30 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் மாநகராட்சிக்கு உட்பட்ட நான்கு மண்டலங்களிலும் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் வெளிப்புற பணியாளர்கள் உடனுக்குடன் தகவல் பரிமாற்றம் செய்திட கேமில் இல்லா பரிமாற்ற கருவி ரூபாய் 45 லட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்

மாநகராட்சியின் வரலாற்று சின்னமாக உள்ள மேடை காவல் நிலையம் மற்றும் ரெட்டியார்பட்டி நான்கு வழி சாலையில் அமைந்துள்ள மலைப்பகுதியில் உச்சியில் அனைத்து அடிப்படை வசதிகளையும் ரூபாய் 30 லட்சத்தில் மேன்மைப்படுத்தப்படும் பொதுமக்களுக்கு மாநகராட்சிக்கான சொத்து வரி மற்றும் குடிநீர் வரிகளை எளிதில் மாநகராட்சிக்கு செலுத்த ஏதுவாக நடமாடும் வரி வசூல் வாகனம் ரூபாய் 25 லட்சத்தில் கொள்முதல் செய்யப்படும் மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் ஆக்கிரமிப்புகளை தடுக்க ரூபாய் 50 லட்சம் மதிப்பீட்டில் தடுப்பு வேலை அமைக்கப்படும் மாநகராட்சி மண்டல அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ரூபாய் 10 லட்சத்தில் உடற்பயிற்சி கூடம் அமைக்கப்படும் உரக்கிடங்கு வளாகத்தில் 58 எம் எல் டி கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்காக ரூபாய் 93.44 கோடி மதிப்பு எட்டில் பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மாநகராட்சியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் திட்ட பணிகளால் சேதுமடைந்த சாலைகளை சீரமைக்க 237 கிலோமீட்டர் தூரத்திற்கு ரூபாய் 13 கோடி மதிப்பீட்டில் அரசு மானியம் மற்றும் மாநகராட்சி பொது நிதி பங்களிப்புடன் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது

நெல்லை மாநகராட்சி பகுதிகளில் போக்குவரத்திற்காக இடையூறாக சாலை மற்றும் தெருக்கூலில் சுற்றி தெரியும் மாடுகளை பிடித்து கொட்டகைகள் அமைக்கப்படும் அதனை பராமரிக்கவும் பதிவு செய்யப்பட்டுள்ளது அதற்காக ரூபாய் 1.6 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது ரூபாய் 15 கோடியில் நெல்லையும் மண்டலம் அலுவலக கட்டிடம் மற்றும் மாமன்ற கூட்டு அரங்கம் கட்டுவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது மாணவரசியின் தலைமை நீரோட்டம் நிலையங்களில் இருந்து வரும் பிரதான குழாய்களை மாற்றி அமைக்கும் பணிக்காக ரூபாய் 33 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது நெல்லை மாநகராட்சிக்கு உட்பட்ட பழைய பேட்டை பகுதியில் புதிதாக பேருந்து நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது மாநகராட்சி விரிவாக்க பகுதிகளில் ரூபாய் 5 கோடியில் புதிய மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் அமைக்க திட்டமிட்ட பொழுது கூட்டத்தில் முன்னாள் மேயர் சரவணன் நிதி குழு தலைவர் சுதா மூர்த்தி கவுன்சிலர்கள் தச்சை சுப்பிரமணியன் சந்திரசேகர் முத்துலட்சுமி சண்முக பாண்டியன் உலகநாதன் கருப்பசாமி கோட்டையப்பன் கோகுல வாணி சுரேஷ் பவுல்ராஜ் கந்தன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

## இலவச வீட்டுமனை பட்டா வழங்குவது குறித்து மாவட்ட கன்னியாகுமரி ஆட்சித்தலைவர் பொதுமக்களை நேரில் சந்தித்து கலந்துரையாடல்

கன்னியாகுமரி, மார்ச்.27

கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்குட்பட்ட மருங்கூர் பகுதி பொதுமக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, நேரில் சந்தித்து கலந்துரையாடி தெரிவிக்கையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 10 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சேபனையில்லா அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க ஆணை யிட்டுள்ளார்கள்.



அதனடிப்படையில் கன்னியாகுமரிமாவட்டம் அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்குட்பட்ட மருங்கூர் பகுதிகளில் அரசு நிலத்தினை ஆக்கிரமித்து குடியிருப்பு அமைந்துள்ள நிலமில்லாதவர்களுக்கு ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி இலவச வீட்டுமனை பட்டா வழங்குவது குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதோடு, குடியிருப்பு பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களை நேரில் சந்தித்து கலந்துரை யாடப்பட்டது. அவர்களில் தகுதியானவர்களுக்கு பட்டா வழங்க வருவாய்த்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் எஸ்.காளீஸ்வரி, அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு.முருகன், துறை அலுவலர்கள், உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161